ஊராட்சிக் கோட்டை மலையையும் - அணைக்கு வரும் நடத்தையும் விலைக்கு வாங்கி எருமை வண்டிகள் மூலம் கல்கொண்டு வந்து முப்போகம் விளையும் கால்வாயை வெட்டிப் பொதுவுடைமை ஆக்கினான். இப்பணி முடித்த காலிங்கராயன் தன் பரம்பரையினர் அக்கால்வாயைப் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையிட்டுப் பொள்ளாச்சி (ஜமீன்) ஊத்துக்குளியில் குடியேறினான்.

பவானியாற்று நீரில் குளிக்கும் மகளிர் தொலைத்த அணிகலன்கள் நதியின் அடியில் இருந்தாலும் மேலே கண்களுக்குத் தெரியுமாம். பவானியாற்றுத் தண்ணீர் சந்தன வாசம் வீசுமாம். இதனை

'புனல் பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீர்'

என்று பாடுகிறார் பெருங்குன்றூர்க் கிழார் (பதிற்றுப்பத்து 86).
இன்று.............................?


புலவர். **செ. இராசு** எம்.ஏ.,பி.எச்டி.,
3பி, வெங்கடேசுவரா நிவாஸ்,
13/2 வள்ளியம்மை வீதி,
நாராயணவலசு, ஈரோடு - 638 011.
தொலைபேசி : 220940

'கொங்கு ஆய்வு மையம்'
ஈரோடு 638 011.



(ஈரோட்டில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டில் வெளியிடப்பட்டது: 9.1.2002)

சோழன் பிரிண்டர்ஸ்-ஈரோடு. ✆ 255581


# காலிங்கராயன் கால்வாய்

'நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே'

என்று பாடினார் குடபுலவியனார் என்னும் புலவர் (புறநானூறு 18) நீரை நிலத்தோடு சேர்த்தோர் புகழே உலகில் நிலைக்கும் என்கிறார் புலவர்.

கொங்குநாட்டில் முன்பு பவானி (4), நொய்யல் (32), உப்பாறு (4), மீன்கொல்லியாறு (18), அமராவதி (20), நன்காஞ்சி (4), நல்லமங்கையாறு (6), குடவனாறு (2) முதலிய ஆறுகளில் 90 அணைகள் கட்டப்பட்டுள்ளதாகக் கொங்கு ஆவணங்கள் கூறுகின்றன.

பவானியாற்றில்உள்ள பழைய அணை நான்கில் காலிங்கராயன் அணை ஒன்று. கொங்குப் பாண்டிய மன்னன் வீரபாண்டியன் (1265-1285) தளபதியும் அமைச்சனுமான வெள்ளோட்டுக்

கனகபுரம் கொங்கு வேளாளரில் சாத்தந்தை குல நஞ்சைய கவுண்டர் மகன் காலிங்கராயன் (இயற் பெயர் லிங்கையன்) 1269 இல் தொடங்கி 1280 ஆம் ஆண்டு அணை கட்டிக் கால்வாயையும் வெட்டி முடித்தான்.

பாண்டியன் துணையுடன், தன் குடும்பச் சொத்தைக் கொண்டும் பங்காளிகள் ஆதரவுடனும் குடிமக்கள் உதவியுடனும் இப் பணியைக் காலிங்கராயன் செய்து முடித்தான். அணைகட்டிக் கால்வாய் வெட்டவும் தொடர்ந்த பராமரிப்புக்காகவும் கொங்கு நாட்டில் 'காலிங்கராய வினியோகம்' என்ற வரி விதிக்கப்பட்டது.

'எற்று திரைப் பொன்னி கூடுறு வானி இடைமடங்க
வெற்றி மிகுத்த அதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற அறிவினன் காலிங் ராயன்செய் கால்வழிநீர்
உற்ற வனத்தை உறுவய லாக உயர்த்தியதே.'

என்பது ஒரு தனிப் பாடல்

அன்று வனம் வயலாகியது.
இன்று வயல் வனமாகிறது.

பவானியில் அணை உள்ள இடத்தைவிட காலிங்கராயன் கால்வாய் நொய்யலில் கலக்கும் ஆவுடையாபாறை 124 அடி தாழ்வான பகுதியாகும். நேராக கால்வாய் வெட்டியிருந்தால் தண்ணீர் விரைந்து ஓடிவிடும்; வயலுக்குப் பாயாது. மேடு கண்ட இடமெல்லாம் கால்வாய் வளைத்து வளைத்து வெட்டப்பட்டுள்ளது. அதனால் 32 மைல் நீளம் உள்ள தூரத்தில் கால்வாய் 56 ½ மைல் நடந்து நிதானமாகச் செல்லுகிறது.

வயல்களுக்குப் பாய்ந்து எஞ்சிய நீர் நொய்யலில் சேர்கிறது. அங்கு அணை கட்டி கரூர் வரை கால்வாய் வெட்டி நீர் பாய்ச்சக் காலிங்கராயன் திட்டமிட்டுள்ளான். அணை கட்ட முயற்சித்த இடம் ஓட்டை அணை என்ற பெயருடன் இன்றும் உள்ளது.

பவானி - நொய்யல் ஆறுகளை இணைத்து, அமராவதியையும் இணைக்க முயற்சித்தவன் காலிங்கராயன்.

'காவிரி யோடு கலக்குது வானியைக் கட்டணைநீர்
பூவிரி செய்களுக் கூட்டிநல் காஞ்சி புகுதவிசை
தேவர்கள் சாம்பவர் பாவாணர் எல்லாம் தினம்மகிழ
மாவிச யம்பெறு காலிங்க னும்கொங்கு மண்டலமே'

என்பது கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகப்பாடல்(70).

'திண்டிறல் வாளியில் காண்டனை கட்டிக்
கருவூர் வரைக்கும் வரிசையாய் வாய்க்கால்
நடத்தும் உதாரன் படைக்குயர் தீரன்
தாலங்கள் புகழும் காலிங்க ராயன்'

என்பது வெள்ளோடு பெரியணன் குறவஞ்சிப் பகுதியாகும்.

உலகில் மூன்று செயல்கள் ஒப்பற்றது என ஒரு புலவர் பாடுகிறார். இராமன் சீதையை மீட்கச் சேது அணை கட்டியது, கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியது; காலிங்கராயன் அணை கால்வாய் வெட்டியது என்பன அவை என்று அவர் கூறுகிறார்.

''திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன் முனாலடைத் தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நாடது வாழப் பவானிதனைக்
கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே'

என்பது அவர் பாட்டு.